முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை
அசல் வழக்கு எண். 87/2024

வா.சா.1– முதல் விசாரணை தொடர்ச்சி– நாள் 04–06–2025

பெயர் = கோபாலகிருஷ்ணன் வா.சா.–1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி.–

நான் அசல் வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பில் கூடுதல் வாக்குமூலம் அபிடவிட்டை தாக்கல் செய்கிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

கடந்த 06.07.2005ம் தேதி 1ம் பிரதிவாதிக்கு முத்துராஜ் எழுதிக்கொடுத்த பதிவு ரசீது ஆவணம் கணினி நகல் வா.சா.ஆ.10 என குறியீடு செய்யப்படுகிறது.

22.09.1998ம் தேதியிட்ட கோணஞ்செட்டியார் என்பவர் வேலுச்சாமிக்கு எழுதிக்கொடுத்த பதிவு தான செட்டில்மெண்டு பத்திரம் கணினி நகல் வா.சா.ஆ.11 என குறியீடு செய்யப்படுகிறது.

20.11.2014ம் தேதியிட்ட சின்னத்தாய் மற்றும் ஒருவர் வாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஆவணம் கணினி நகல் வா.சா.ஆ.12 என குறியீடு செய்யப்படுகிறது.

27.11.2003ம் தேதியிட்ட ராமர்நாயக்கர் வாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஆவணம் கணினி நகல் வா.சா.ஆ.13 என குறியீடு செய்யப்படுகிறது.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.